


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம்

கொண்டையம்பாளையம் ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம்,கோயம்புத்தூர் அன்னூர் வட்டம்,கொண்டையம்பாளையம் கிராமம் (ம) ஊராட்சி க.ச எண்கள்- **153/2C1A,2C2B** - யில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணைய தள விண்ணப்ப எண் : **0J3IWKCW/2025**

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 2.46 ஏக்கர் (அ) 9957.00 ச.மீ (பட்டா படி)
: 2.46 ஏக்கர் (அ) 9957.00 ச.மீ (பத்திர படி)
: 2.46 ஏக்கர் (அ) 9957.00 ச.மீ (புல வரைப்படம் படி)

வ

ஒதுக்கிய மனைகள் : 54 மனைகள்

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு: 3258.57 ச.மீ

பூங்காவுக்கு தேவையான பரப்பளவு:-

தேவையான பரப்பளவு - (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10.0 %
(9957.00 -3258.57) X10.0% = 669.84 ச.மீ

தேவையான பரப்பளவு - 669.84 ச.மீ(10.0%)

பூங்கா ஒதுக்கீடு அரசாணை எண்.18 ந.நி. (ம) கு.வ.து நாள்: 04.02.2019-ன் படி TNCDBR-2019 -ன் விதி எண் : 47(6)-ன் படி O.S.R ஒதுக்கிடு பரப்பளவான 669.84 சதுர மீட்டருக்கு ஈடாக தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

TANGEDCO (ம) பொது உபயோகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பளவு:-

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) X 0.5%

(9957.00 - 3258.57) X 0.5% = 33.49ச.மீ

தேவையான பரப்பளவு : 33.49 ச.மீ (0.50%)

TANGEDCO ஒதுக்கீடு : 37.45 ச.மீ (0.55%)

பொது உபயோகம் ஒதுக்கீடு : 38.15 ச.மீ (0.56%)

மூலை முடுக்கு:-

12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ விடப்படல் வேண்டும்.

12.0மீ முதல் 30.50மீ வரை உள்ள சாலைகளுக்கு 4.5மீ X 4.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 18 ந. நி (ம) கு. வ துறை நாள்: 04.02.2019 (ம) அரசாணை எண். 16 ந. நி (ம) கு. வ. துறை நாள்: 31.01.2020 ன் படி சாலை , பொது உபயோக பகுதி (ம) TANGEDCO -க்கான பகுதி கொண்டையம்பாளையம் ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்புத்துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 60cm x 120cm அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள்,மழைநீர் வடிகால் வசதி குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை ஊராட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.
7. அரசாணை எண்:141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

ம.வ/கோ.உ.தி.கு எண் : 85/ 2026
திட்ட அனுமதி எண் : 102/ 2026 (இணையவழி)

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர்(மு.கூ.பொ.)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம்
கோயம்புத்தூர் மாவட்டம்

Signature Not Verified
Signed by Assistant Director
Location:Coimbatore
Date:2026.02.06 19:58:57

Signature Not Verified
Signed by Village Panchayat President
Location:Coimbatore
Date:2026.02.24 11:09:25